# மன்னார்குடி நகராட்சி

## அவசரக் கூட்டம்

நிகழும் 2025 வருடம் டிசம்பர் மாதம் 02.12.2025 **செவ்வாய்க்கிழமை** மாலை 5.00 மணியளவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**முன்னிலை:- மன்னை த.சோழாராஜன்.பி.இ.,**

**நகர்மன்றதலைவர்**

## பொருள்கள்

<table>
<tr><td colspan="3">நகர்மன்றதலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் அவசரக்கூட்டப் பொருள்<br>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 Under sub-rule(5) of rule 154-A of the Tamil Nadu Urban Local Bodies Rules, 2023-ன் படி மாற்றுத்திறனாளிகளை மன்ற உறுப்பினர்களாக நியமனம் செய்திட மாற்றம் செய்யப்பட்ட விதிகளின் வழிக்காட்டுதலின்படி, மன்னார்குடி நகர்மன்றத்தின் மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு.சா.முத்துக்கருப்பன், த/பெ. சாமி தேவர், அவர்கள் 25.11.2025-ந் தேதியன்று பதவி ஏற்றுக்கொண்டதை மன்றத்தின் அவசரக்கூட்ட பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் நியமன உறுப்பினர்களாக தேர்வு செய்திட உத்திரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.</td></tr>
<tr><td>பொருள் எண்.1</td><td>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகராட்சிகளில் “தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டம்” ன்கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.29143/2025/எச்3 நாள்.05.11.2025ன்படி கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, மன்னார்குடி</td><td>தீர்மானம் எண். 304<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

நகராட்சியில் 21.11.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விவரம் | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மன்னார்குடி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவு திட்டத்தின்கீழ் இலவசமாக காலை உணவு வழங்குதல் (மூன்று ஆண்டுகளுக்கு) | மன்னை உழவன் சிறுதானிய அங்காடி, மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 1.92 % குறைவு |
| 2. | | உழவன் புட்ஸ், மன்னார்குடி | மதிப்பீட்டைவிட 0.21 % அதிகம் |

இதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், அட்டவணை 5ன்படி உணவு விநியோகத்திற்கான செலவினத்தொகை ரூ.80,000/-லிருந்து (ஒரு மாதத்திற்கு) ரூ.58,800/- ஆக குறைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள மன்னை உழவன் சிறுதானிய அங்காடி, மன்னார்குடி என்ற நிறுவனத்திடம் விலைக்குறைப்பு செய்து தருமாறு கோரப்பட்டதற்கிணங்க, அந்நிறுவனம் விலைக்குறைப்பு செய்து வழங்கிய விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் விவரம் | நிறுவனம் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மன்னார்குடி நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவு திட்டத்தின்கீழ் இலவசமாக காலை உணவு வழங்குதல் (மூன்று ஆண்டுகளுக்கு) | மன்னை உழவன் சிறுதானிய அங்காடி, மன்னார்குடி. | மதிப்பீட்டை விட 1.76 % குறைவு |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மதிப்பீட்டு தொகையை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மன்னை உழவன் சிறுதானிய அங்காடி, மன்னார்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் பணிகளுக்கு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேலும், ஒவ்வொரு ஆண்டுக்கு 5 சதவீதம் கூடுதல் மதிப்பீட்டு தொகையுடன். 5 சதவீதம் ஜிஎஸ்டி தொகை செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்.2</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பழுதடைந்த தார் சாலைகளை (Patch Work) சீரமைக்கும் பணியை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின்கீழ் மேற்கொள்ள 19.11.2025 அன்று Online முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனம் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.S.மோகன்,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.05 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. N.மாரிமுத்து,<br>ஒப்பந்ததாரர்,<br>மன்னார்குடி.</td><td>மதிப்பீட்டைவிட 0.82 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு:-</u> மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.S.மோகன், மன்னார்குடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மானம் எண். 305<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்.3 | 15-வது மத்திய நிதிக்குழு மானியம் 2025-26 (Tied Grant)ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட புதுப்பாலம் மேற்கு புறத்தில் தடுப்பு சுவர் மற்றும் அணுகுசாலை அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டதற்கு Consultancy Charges மதிப்பீட்டுத் தொகையில் ஒரு சதவீதத் தொகை ரூ. 143530/- பாரத் பில்டர்ஸ், மன்னார்குடி என்ற நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு:-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். | **தீர்மானம் எண். 306**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

**(ஒ/ம்) மன்னை த.சோழராஜன்,பி.இ.,**

**மன்னார்குடி நகர்மன்றம்**

**// உண்மை நகல் //**

**ஆணையர்,**

**மன்னார்குடி நகராட்சி**